செ.வெ.எண்: 364 நாள்: 21.5.08

# செய்திக் குறிப்பு

## மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தில் 35 வாரிசுதாரர்களுக்கு பணி நியமன ஆணை இன்று (21.5.2008) வழங்கினார்.

முந்தைய அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் அரசு மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களில் நேரடி நியமனங்களுக்கு **29.11.2001** முதல் ஒட்டு மொத்த தடை விதிக்கப்பட்டிருந்தது. அரசு பணியின்போது இயற்கை எய்திய அரசு பணியாளர்களின் பணியிடங்களில் வாரிசுதாரர்களை கருணை அடிப்படையில் நியமனம் செய்வதும் தடை செய்யப்பட்டது. இதன் காரணமாக பணியிடை காலத்தில் இயற்கை எய்திய பணியாளர்களின் வாரிசுதாரர்கள் பணி நியமனம் கிடைக்காமல் துன்புற்றனர்.

திராவிட முன்னேற்ற கழக அர்சு மீண்டும் பதவியேற்ற பின்னர் அரசுப் பணியில் நேரடி நியமனத்திற்கு இருந்த தடை நீக்கப்பட்டது. கருணை அடிப்படையில் நியமனம் செய்வதற்கு இருந்த தடையும் நீக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் சென்னை குடிநீர் வாரியத்தில் முதல் கட்டமாக **9.7.2007** அன்று **22** வாரிசுதாரர்களுக்கும், இரண்டாவது கட்டமாக **11.1.2008** அன்று 28 வாரிசுதாரர்களுக்கும் மற்றும் மூன்றாவது கட்டமாக **26.1.2008** அன்று 5 வாரிசுதாரர்களுக்கும் ஆக மொத்தம் 55 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, சென்னை குடிநீர் வாரியத்தில் பணியில் இருக்கும்போது மரணமடைந்தவர்களின் வாரிசுதாரர்கள் **35** பேர்களுக்கு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இன்று **(21.5.2008)** தலைமைச் செயலகத்தில் கருணை அடிப்படையில் பணிநியமன ஆணை வழங்கினார்கள். இதுவரை **89** வாரிசுதாரர்கள் களப்பணியாளர்களாகவும், ஒருவர் இளநிலை உதவியாளராகவும் ஆக மொத்தம் 90 பேர்கள் கருணை அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்நிகழ்ச்சியின் போது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலர் திரு.கே.தீனபந்து, இ.ஆ.ப., சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., , செயல் இயக்குநர் திரு.எஸ்.தங்கசாமி, இ.ஆ.ப., மற்றும் வாரிய உயர் அலுவலர்களும் உடன் இருந்தனர்.

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.